மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசியமயமாக்கப்பட்ட பேருந்துகளிலே யார், யார் வேலை செய்தார்கள் என்பதை அந்தந்த மாவட்டப் போக்குவரத்து அதிகாரிகள் பரிந்துரை செய்ததன் பேரில் இங்கே நாம் வேலை கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அப்படி இன்னும் கொடுக்கப்படவில்லை யென்று யாராவது சொல்வார்களே யானால் அந்த தகுதியை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கவேண்டும்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தேசியமயமாக்கப்பட்ட பேருந்துகளின் முதலாளிகள் பல தொழிலாளர்களைச் சட்டத்திற்குட்பட்ட முறையில் பதிவு செய்யாமல் தற்காலிகமாக, 10, 15 ஆண்டுகள் வேலை வாங்கியிருக்கிறார்கள். அது போன்ற தொழிலாளர்களுக்கும் வேலை வாய்ப்புத் தர அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, அப்படி தனியார் துறையிலே பணியாற்றிக் கொண்டிருக்கும் போது அவர்கள் சரியான முறையிலே பதிவு செய்யாமல் இருந்திருப்பார்களேயானால் இப்பொழுது நாம் அவர்களை எடுத்துக் கொள்வது என்பது கொஞ்சம் சிரமமான காரியம். அப்பொழுதே அவர்கள் அரசாங்கத்திற்குத் தெரிவித்து அந்தக் காரியங்களைச் செய்து கொண்டிருக்க வேண்டும். இப்பொழுது இளைஞர்கள் நிறைய பேர் வேலையில்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கிற நேரத்தில், இவர்களை எடுத்துக் கொள்வது என்பது கொஞ்சம் யோசனைக் குரியதாகத் தானிருக்கிறது. இருந்தாலும் மனிதாபிமான அடிப்படையிலே அரசாங்கம் சிந்திக்கும்.

கிராமப்புற வழித்தடங்களில் மினி பஸ்களை விடும் திட்டம்:

வினா எண். 578—திரு. செ. செம்மலை: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமப்புற வழித்தடங்களில் 'மினி பஸ்கள்' விடும் திட்டம் எப்போது துவக்கப்படும்?

(ஆ) முதன் முறையாக எத்தனை மினி பஸ்கள் விட திட்டமிடப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) 1978-ஆம் ஆண்டிலிருந்தே கிராமப்புற வழித்தடங்களில் மினி பஸ்கள் விடும் திட்டம் படிப்படியாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(ஆ) இது வரையில் பல்வேறு மாவட்டங்களில் உள்ள 66 வழித்தடங்களில் 70 மினி பஸ்கள் விடப்பட்டுள்ளன.

1982 மார்ச்சு 20]

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்ற மினி பஸ்களுக்கு அரசு ஏதேனும் வரிச் சலுகை அளித்துள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, வரிச் சலுகை அளிக்கப்பட்டுள்ளது. நகரப் பேருந்துகளுக்கு ரூ. 115 நாம் ஒரு இருக்கைக்கு வாங்குகிறோம். மினி பஸ்ஸைப் பொறுத்த மட்டிலும் ரூ. 50 தான் ஒரு இருக்கைக்கு வாங்குகிறோம்.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற மினி பஸ்களுக்கு அரசு வரிச் சலுகை அளித்துள்ளதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இருந்தாலும், மினி பஸ்களில் மற்ற பேருந்துகளைப் போன்ற ஒரே கட்டணம்தான் வசூலிக்கப்பட்டு வருகிறது. எனவே, வரிச் சலுகை அளித்துள்ள இந்த நிலையில் மினி பஸ்கள்—கிராமப் புறங்களை இணைக்கின்ற அளவிலே, இந்த மினி பஸ்கள் விடப் பட்டுள்ளதால்—பயணக் கட்டணத்தைக் குறைக்க அரசு ஏதேனும் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, இந்த மினி பஸ் போகக்கூடிய இடத்தில் சரியான வசூல் இருக்காது. அதை ஓட்டுகின்ற அளவிற்கு அதிலே இலாபம் வராது என்ற காரணத்தால்தான் அந்த வரிச் சலுகை கொடுத்திருக்கிறோம். அதைக் கொடுத்துவிட்டு மீண்டும் நாம் கட்டணச் சலுகையைக் கொடுப்போமானால்—இதற்கு முன்பே கட்டணச் சலுகையும் வரிச் சலுகையும் கொடுக்காமல் அப்படியே வைத்திருக்க முடியும். எனவே, வரிச் சலுகை கொடுத்தது அதைக் கொஞ்சம் இலாபகரமாக ஓட்ட வேண்டுமென்பதற்காகத்தான்.

திரு. சி. பழனிமுத்து: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மினி பஸ் ஓடுகின்ற வழித் தடங்களில் ஓட்டுகின்ற டிரைவர்களுக்கும், கண்டக்டர்களுக்கும் குறைவாக தினப்படி கொடுப்பதால் அவர்கள் சரியான முறையில் மினி பஸ்களை ஓட்டவில்லையென்று அரசுக்குப் புகார் வந்துள்ளதா? அப்படி அவர்களுக்கு அதிகப்படியான தினப் படியைக் கொடுக்க அரசுக்கு உத்தேசம் உண்டா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட புகார் எதுவும் இதுவரையில் வரவில்லை. இனிமேல் வருமேயானால் அதைப் பார்த்து அரசு நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறது.

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைப் பகுதிகளிலே ஓடும் சேரன் போக்குவரத்துக் கழகம், அண்ணா போக்குவரத்துக் கழகம் ஆகிய நிறுவனங்கள் தவிர மற்றப் போக்குவரத்து நிறுவனங்களில் மினி பஸ்கள் சரியாக விடப்படுவதில்லை என்று சொல்லப்படுகிறது. ஆகவே, அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் நஷ்டம் அடையும் வழித் தடங்களில் அந்த இழப்பை ஓரளவிற்கு குறைக்கும் வகையிலும், கிராமப் பகுதி மக்கள் பயனடையும் வகையிலும் எல்லாப் போக்குவரத்துக் கழகங்களிலும் மினி பஸ்கள் விடுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, அரசினுடைய சட்டப்படி இப்படிப்பட்ட வழித்தடங்களில்தான் மினி பஸ்கள் விடப்பட வேண்டுமென்று வரைமுறையை விதித்திருக்கிறோம். அந்த வரைமுறைக்கு உட்பட்டு எந்தெந்த வழித்தடங்கள் வருகின்றனவோ அங்கு விட்டுக் கொண்டிருக்கிறோம். அதை வேகப்படுத்தும் வகையில் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது. எல்லாப் போக்குவரத்துக் கழகங்களிலும் இந்த நடவடிக்கையை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

மோட்டார் வாகன விபத்துக்களில் இறந்தவர்கள் குடும்பங்களுக்கும், காயமடைந்தவர்களுக்கும் வழங்கப்படும் நிதி உதவி :

*வினா எண். 579—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) மோட்டார் வாகன விபத்தில் இறந்தவர்களின் குடும்பங்களுக்கும், காயமடைந்தவர்களுக்கும், விபத்து நடந்த உடனேயே Ex-Gratia Payment வழங்க வகை செய்யப்பட்டுள்ளதா?

ஆ) ஆம் எனில், எவ்வளவு தொகை வழங்கப்படுகிறது?

(இ) அந்த தொகை உயர்த்தப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) (ஆ) மற்றும் (இ) : விவர அறிக்கை *ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

---

*........137ம் பக்கத்தில் இணைப்பு II-ஆக அச்சிடப் பெற்றுள்ளது.